# திருநெல்வேலி மாநகராட்சி

## 28.12.2022 அன்று நடைபெற்ற சாதாரணக் கூட்ட பொருட்கள் மற்றும் தீர்மானங்கள் விவரம்

1. இம்மாநகராட்சி நான்கு மண்டல அலுவலகங்கள், சந்திப்பு பேருந்து நிலையம் மற்றும் புதிய பேருந்து நிலையம் ஆகிய பகுதிகளில் திடக் கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ளும் சுய உதவிக் குழுக்கள் மூலம் 653 நபர்கள் மாமன்ற தீர்மானம் எண். 43 நாள்: 30-06-2022–ன்படி அனுமதி வழங்கப்பட்டு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மாமன்ற தீர்மான எண். 149 நாள்: 28.10..2022ன்படி மேற்படி பணியாளர்களின் பணிக்காலம் 10.12.2022 தேதியுடன் முடிவடைவதால், மேற்படி பணியாளர்களின் பணியின் அவசியத்தை முன்னிட்டு கீழ்க்கண்டுள்ள விபரப்படி 41 சுய உதவிகுழுக்கள் மூலம் பணிபுரிந்து வரும் 653 நபர்களை 13.12.2022 முதல் 10.03.2023 வரை மேலும் 88 நாட்களுக்கு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பணிபுரிய அனுமதிக்கவும், அதற்கான செலவினத்திற்கும் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | சுய உதவிக் குழுவின் பெயர் | உறுப்பினர்களின் எண்ணிக்கை | பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள வார்டு அலுவலகம் |
|---|---|---|---|
| 1 | அக்னி சிறகுகள் சுகாதாரப் பணிக்குழு | 26 | திருநெல்வேலி வார்டு |
| 2 | அக்னி பறவைகள் சுகாதாரப் பணிக்குழு | 23 | திருநெல்வேலி வார்டு |
| 3 | தாமிரபரணி சுகாதாரப் பணிக்குழு | 20 | திருநெல்வேலி வார்டு |
| 4 | அருந்ததியர் சுகாதாரக் குழு | 25 | திருநெல்வேலி வார்டு |
| 5 | சாரா சுகாதார சுய உதவிக் குழு | 26 | திருநெல்வேலி வார்டு |
| 6 | வெண்ணிலா சுகாதாரப் பணிக்குழு | 23 | தச்சநல்லூர் மண்டலம் |
| 7 | பசுமை சுகாதாரப் பணிகுழு | 12 | தச்சநல்லூர் மண்டலம் |
| 8 | ஸ்ரீஜெயம் சுகாதார பணிக்குழு | 15 | தச்சநல்லூர் மண்டலம் |
| 9 | காந்திஜி சுகாதரப் பணிக்குழு | 11 | தச்சநல்லூர் மண்டலம் |
| 10 | ஸ்ரீ போராட்சிஅம்மன் ஆண்கள் | 20 | தச்சநல்லூர் மண்டலம் |

| | | | |
|---|---|---|---|
| | குழு | | |
| 11 | ஶ்ரீ உலகம்மன் சுகாதாரப் பணிக்குழு | 10 | தச்சநல்லூர் மண்டலம் |
| 12 | ஶ்ரீ முத்தாரம்மன் ஆண்கள் பணிக்குழு | 19 | தச்சநல்லூர் மண்டலம் |
| 13 | வடக்கத்தி மாரியம்மன் சுகாதாரக் குழு | 20 | தச்சநல்லூர் மண்டலம் |
| 14 | APJ. அப்துல் கலாம் ஆண்கள் குழு | 10 | தச்சநல்லூர் மண்டலம் |
| 15 | TMC 40 சுகாதார சிறப்பு பணிக்குழு | 12 | ராமையன்பட்டி உரகிடங்கு தச்சநல்லூர் மண்டலம் |
| 16 | ஶ்ரீசெல்வ விநாயகர் சுகாதாரப்பணிக்குழு | 12 | பாளை மண்டலம் |
| 17 | ஶ்ரீ காளியம்மன் சுகாதாரப் பணிக்குழு | 12 | பாளை மண்டலம் |
| 18 | தந்தை பெரியார் சுகாதாரப் பணிக்குழு | 13 | பாளை மண்டலம் |
| 19 | ஆதி சக்தி சுகாதாரப் பணிக்குழு | 13 | பாளை மண்டலம் |
| 20 | அன்னை இந்திரா மகளிர் சுயஉதவிக் குழு | 18 | பாளை மண்டலம் |
| 21 | டாக்டர் அம்பேத்கார் ஆண்கள் குழு | 23 | பாளை மண்டலம் |
| 22 | தளபதி ஒணடிவீரன் சுயஉதவிக்குழு | 12 | பாளை மண்டலம் |
| 23 | மகாராஜா ஆண்கள் சுயஉதவிக்குழு | 15 | பாளை மண்டலம் |
| 24 | ஓம்சக்தி சுகாதாரப் பணிக்குழு | 12 | பாளை மண்டலம் |
| 25 | முத்தாரம்மன் சுயஉதவிக்குழு | 10 | பாளை மண்டலம் |
| 26 | ஶ்ரீ அன்னை தெரசா சுயஉதவிக்குழு | 14 | பாளை மண்டலம் |
| 27 | நேருஜி ஆண்கள் சுகாதாரக் குழு | 14 | மேலப்பாளையம் மண்டலம் |
| 28 | மங்களஈஸ்வரி பெண்கள் சுயஉதவிக்குழு | 21 | மேலப்பாளையம் மண்டலம் |
| 29 | பாரதி ஆண்கள் சுய உதவிக்குழு | 19 | மேலப்பாளையம் மண்டலம் |
| 30 | செங்கை வாஞ்சிநாதன் சுகாதாரக் குழு | 18 | மேலப்பாளையம் மண்டலம் |
| 31 | மங்கள விநாயகர் ஆண்கள் சுய உதவிக்குழு | 16 | மேலப்பாளையம் மண்டலம் |
| 32 | செந்தமிழ் மகளீர் சுய உதவிக்குழு | 10 | மேலப்பாளையம் மண்டலம் |
| 33 | சுபாஷ் சந்திரபோஸ் | 12 | மேலப்பாளையம் மண்டலம் |

| | | | |
|---|---|---|---|
| | சுகாதாரப்பணிக்குழு | | |
| 34 | நேதாஜி சுய உதவிக்குழு | 14 | மேலப்பாளையம் மண்டலம் |
| 35 | செம்மொழி சுய உதவிக்குழு | 17 | மேலப்பாளையம் மண்டலம் |
| 36 | அன்னை சத்தியா சுயஉதவிக்குழு | 12 | மேலப்பாளையம் மண்டலம் (12) |
| 37 | அன்னை சந்தியா சுயஉதவிக்குழு | 15 | மேலப்பாளையம் மண்டலம் (15) |
| 38 | திருப்பதி சுகாதாரக்குழு | 18 | மேலப்பாளையம் மண்டலம் |
| 39 | காளியம்மன் ஆண்கள் சுகாதாரப்பணிக்குழு | 17 | மேலப்பாளையம் மண்டலம் |
| 40 | தந்தை பெரியார் ஆண்கள் பணிக்குழு | 16 | மேலப்பாளையம் மண்டலம் |
| 41. | ஸ்டார் சுகாதார பணிக் குழு | 8 | மேலப்பாளையம் மண்டலம் |
| | **மொத்தம்** | **653** | |

**ஆ)** மேலும் திருநெல்வேலி மாநகராட்சி தச்சநல்லூர் மண்டல பகுதிகளில் 8 குடியிருப்போர் நலச்சங்கமும், பாளையங்கோட்டை மண்டல பகுதியில் 10 குடியிருப்போர் நலச்சங்கமும் மேலப்பாளையம் மண்டல பகுதியில் 14 குடியிருப்போர் நல சங்கங்களிலும் 10 ஆண்டுகளாக ஒப்பந்த அடிப்படையில் நலச்சங்கங்களின் மேற்பார்வையாளரின் கீழ் துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. மேற்படி நலச்சங்கங்களுடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் 1.1.2018 முதல் ரத்து செய்யப் பட்டு மாநகராட்சி மூலம் துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இம்மாநகராட்சியில் பணியாற்றும் நிரந்தர துப்புரவு பணியாளர்களின் பற்றாக்குறையை கருத்தில் கொண்டு மண்டல சுகாதார அலுவலர்களால் தெரிவிக்கப்பட்ட துப்புரவு பணியாளர்களின் தேவைப்பட்டியலின்படி சுய உதவிக்குழு துப்புரவு பணியாளர்களை கொண்டு துப்புரவு பணி மேற்கொள்ள ஏதுவாக கீழ்க்கண்டுள்ள விபரப்படி, சுயஉதவிக் குழு பணியாளர்கள் மூலம் திடக்கழிவு மேலாண்மை பணி 01.01.2018 முதல் 88 நாட்களுக்கு மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்திற்கும் மாமன்ற தீர்மான எண். 13 நாள்: 28.03.2018-ல் அனுமதி பெறப்பட்டு அதன்படி சுய உதவிக்குழுக்களின் பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

| **வ. எண்.** | **சுய உதவிக் குழுவின் பெயர்** | **உறுப்பினர்களின் எண்ணிக்கை** | **பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள வார்டு அலுவலகம்** |
|---|---|---|---|
| 1 | ஸ்ரீ பாலாஜி பணிக்குழு | 19 | தச்சநல்லூர் மண்டலம் |
| 2 | வீரத்தாய் சுகாதார பணிக்குழு | 15 | பாளையங்கோட்டை மண்டலம் |

| | | | |
|---|---|---|---|
| 3 | பாரதம் சுகாதார பணிக்குழு | 16 | பாளையங்கோட்டை மண்டலம் |
| 4 | கொழும்பு முனியசாமி குழு | 16 | மேலப்பாளையம் மண்டலம் |
| 5 | ஸ்ரீ வேம்படி மாயாண்டி குழு | 17 | மேலப்பாளையம் மண்டலம் |
| 6 | விஷ்ணு துர்க்கை குழு | 17 | மேலப்பாளையம் மண்டலம் |
| | மொத்தம் | 100 | |

மேற்படி பணியாளர்கள் பணிக்காலம் மாமன்ற தீர்மானம் எண். 149, நாள்: 28.10.2022ன் படி 100 சுய உதவிக்குழு தூய்மைப் பணியாளர்களுக்கு அனுமதி காலம் 03.12.2022 -வுடன் முடிவடைவதால் மேலும் 06.12.2022 முதல் 03.03.2023 வரை 88 நாட்களுக்கு மேற்படி பணியாளர்களை பணியில் ஈடுபடுத்துவதற்கும் அதற்கான செலவினத்திற்கும் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை ந. க. எண். M3/15043/2022 நாள்: 28.06.2022 -ன் படி நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு ஊதியம் ரூ.436/- என்பதன் அடிப்படையில் ஊதியம் வழங்கவும் மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

உச்சநீதிமன்ற வழிகாட்டுதலின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டுள்ள நகராட்சி திடக்கழிவு (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள் 2000 ஐ பின்பற்றி குப்பையினை வீடுவீடாகச் சென்று மக்கும் மற்றும் மக்காத குப்பையாகப் பிரித்து வாங்க வேண்டியது இன்றியமையாத ஒன்றாகும். இம்மாநகராட்சியிலுள்ள குறைந்த எண்ணிக்கையிலான துப்புரவுப் பணியாளர்களைக் கொண்டு மாநகரப் பகுதி முழுவதிலும் திடக்கழிவு மேலாண்மைப் பணிகளை மேற்கொள்ள இயலாத நிலை உள்ளது. இந்நிலையில் இக்குழுக்களைச் சேர்ந்த நபர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.436/- என்ற அடிப்படையில் தொகை வழங்குவதால் மாநகராட்சிக்கு ஏற்படும் செலவினம் வெகுவாக குறைகின்றது. மேலும் அரசாணை எண். 69, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (ந.நி3) துறை, நாள்: 04-05-1998- ன் மூலம் தமிழ்நாட்டில் நகராட்சி சேவைப் பணிகளை தனியார் மயமாக்குதல் குறித்து வெளியிடப்பட்டுள்ள கொள்கைக் குறிப்பில், தனியார்மயமாக்கப்பட வேண்டிய சேவைப்பணிகளுள் திடக்கழிவு மேலாண்மையும் ஒன்று எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் நிரந்தர துப்புரவு பணியாளர்கள் பணியமர்த்தினால் செலவினம் மாதம் ஒன்றுக்கு ரூ. 1,68,67,200 ஆகும். சுய உதவிக் குழுக்களை

பணியில் ஈடுபடுத்தினால் செலவினம் மாதம் ஒன்றுக்கு ரூ. 98,49,240/- ஆகும். மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் மேற்கண்ட 47 சுய உதவிக் குழுக்களை நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.436/- என மாவட்ட ஆட்சித் தலைவரின் செ.மு. ஆணை ந.க.எண். M3/15043/2022 நாள்: 28-06-2022-ன் படி வழங்கலாம். தின ஊதியம் அடிப்படையில் 753 (653+100) சுயஉதவிக்குழு தூய்மை பணியாளர்களுக்கு மாமன்ற தீர்மான எண்.149 நாள்: 28.10.2022 -ன்படி முறையே அனுமதி காலம் 14.09.2022 முதல் 10.12.2022 வரை மற்றும் 07.09.2022 முதல் 03.12.2022 உடன் முடியவுள்ள நிலையில் அ)வில் குறிப்பிட்டுள்ள 653 சுய உதவிக் குழு தூய்மை பணியாளர்களுக்கு 13.12.2022 முதல் 10.03.2023 வரை 88 நாட்களுக்கும் ஆ)வில் குறிப்பிட்டுள்ள 100 சுய உதவிக் குழு தூய்மை பணியாளர்களுக்கு 06.12.2022 முதல் 03.03.2023 வரை 88 நாட்களுக்கும் மேற்படி சுயஉதவிக்குழு பணியாளர்களை திடக்கழிவு மேலாண்மைப் பணியில் ஈடுபடுத்தவும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். M3/15043/2022 நாள்: 28.6.2022-ன் படி தூய்மை பணியாளர்களின் ஊதியம் ரூ.436/- என வழங்கவும் அதற்காகும் மொத்த செலவினத்தினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம். மேலும் அவசர அவசியம் கருதி மாமன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதற்கு மாமன்றத்தின் பின்னேற்பு வழங்கலாம்.

**(H2/7560/2017)**

**தீர்மானம் எண்: 205 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

---

2. திருநெல்வேலி மாநகராட்சிக்கு அரியநாயகிபுரம் அணைக்கட்டில் இருந்து 50 MLD குடிநீர் பெறுவதற்கு ரூ.295.00 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கான குடிநீர் அபிவிருத்தி திட்டத்திற்கு தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனத்தின் வளர்ச்சி நிதியத்தின் கீழ்க்கண்டுள்ள விபரப்படி கடன் மற்றும் மான்ய நிதியுதவியுடன் மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு திட்ட மேலாண்மை ஆலோசகராக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டு மேற்படி வாரியம் மூலம் 13.10.2016ல் வேலை ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றது. மேற்படி திட்டப்பணியில் தற்போது 95 சதவீதப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

மேற்படி திட்டப்பணியானது ஜெர்மன் வங்கி நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருவதால், இத்திட்டமானது தற்போது பயன்பாட்டிற்கு கொண்டு

வரப்படுவதாலும், தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவை கழகத்தில் இருந்து பெறப்பட்ட கடிதத்தின்படி, கீழ்க்கண்டவாறு குடிநீர் வைப்புத் தொகை மற்றும் குடிநீர் கட்டணங்களை 5 வருடங்களுக்கு ஒருமுறை 5 சதவீதம் உயர்த்திடவும் ஏற்கனவே மாமன்றத் தீர்மானம் எண்.112 நாள் 01.12.2021ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

எனவே, ஏற்கனவே அங்கீகாரம் வழங்கப்பட்டு நடைமுறையில் உள்ள குடிநீர் விநியோக உபவிதிகளில் உள்ள பிரிவு 11 மற்றும் 12ல் உரிய கீழ்க்கண்ட திருத்தங்கள் மேற்கொள்வதற்கு கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் நகராட்சி நிர்வாக இயக்குநரக தலைமைப் பொறியாளர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.28173/2022/இ-ஏ-2 நாள் 08.11.2022ல் பொது அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு:-

## குடிநீர் விநியோக ”வரைவு” துணைச்சட்டம்

| *வ. எண்.* | *தற்போதுள்ள துணைச்சட்டம்* | *திருத்தியமைக்கப்படும் உத்தேச துணைச்சட்டம்* | | | |
|---|---|---|---|---|---|
| | உபவிதி 11 மற்றும் 12 | உபவிதி 11 மற்றும் 12 | | | |
| 1 | (1)ஒவ்வொரு குடியிருப்பு கட்டிடங்களுக்கான குடிநீர் வைப்புத் தொகை ரூ.6500/-<br>(2)ஒவ்வொரு வணிகம் மற்றும் தொழிற்சாலை கட்டிடங்களுக்கான குடிநீர் வைப்புத் தொகை ரூ.12500/- | கட்டிட பரப்பளவு | நிர்ணயம் செய்யப்படும் வைப்புத் தொகை ரூ. | | |
| | | | குடியிருப்பு | வணிகம் | தொழிற்சாலை |
| | | 500 ச.அடி வரை | 7500 | 15000 | 15000 |
| | | 501-1200 ச.அடி வரை | 10000 | 20000 | 20000 |
| | | 1201-2400 ச.அடி வரை | 12500 | 25000 | 25000 |
| | | 2401 | 15000* | 30000* | 30000* |
| 2 | (1).ஒவ்வொரு குடியிருப்பு கட்டிடங்களுக்கான குடிநீர் கட்டணம் ரூ.100/- (10000 லிட்டர் வரை)<br>10000 லிட்டருக்கு மேல் ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் ரூ.10/-.<br>(2).ஒவ்வொரு வணிகம் மற்றும் தொழிற்சாலைக் கட்டிடங்களுக்கான குடிநீர் கட்டணம் ரூ.200/-<br>10000 லிட்டருக்கு மேல் ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் ரூ.20/- | கட்டிட பரப்பளவு | குடியிருப்பு | வணிகம் | தொழிற்சாலை |
| | | | மாதம் ஒன்றுக்கு | | |
| | | 500 ச.அடி வரை | 150 | 300 | 300 |
| | | 501-1200 ச.அடி வரை | 180 | 360 | 360 |
| | | 1201-2400 ச.அடி வரை | 210 | 420 | 420 |
| | | 2401 | 240* | 480* | 480* |

| | |
|---|---|
| 3 | *குறியீட்ட இனமானது 2401 சதுர அடி பரப்பளவு வரையிலான கட்டிடத்திற்கு அடிப்படை வைப்புத் தொகை மற்றும் குடிநீர் கட்டணம் ஆகும். 2401 சதுர அடிக்கு மேல் பரப்பளவு உள்ள கட்டிடங்களுக்கு விகிதாச்சாரப்படி குடிநீர் வைப்புத் தொகை மற்றும் குடிநீர் கட்டணம் நிர்ணயம் செய்யப்படும். |
| 4 | மேற்கூறப்பட்ட குடிநீர் வைப்புத் தொகை மற்றும் குடிநீர் கட்டணம் ஆகியவற்றை 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை அத்தொகையில் 5 சதவீதம் உயர்த்தப்படும். |

நிபந்தனைகள்:

1. மேற்படி பொருள் தொடர்பாக குடிநீர் விநியோக உபவிதிகளில் (தமிழ் மற்றும் ஆங்கிலம்) உரிய திருத்தம் மேற்கொண்டு விதிகளுக்குட்பட்டு மேற்கண்ட குடிநீர் கட்டணம் மற்றும் வைப்புத் தொகை வசூலிக்கப்பட வேண்டும்.
2. திருநெல்வேலி மாநகராட்சி மாமன்றத் தீர்மானத்தின் படியும் 5 ஆண்டிற்கு ஒருமுறை 5% -க்கும் குறையாமல் குடிநீர் கட்டணம் மற்றும் வைப்புத் தொகை உயர்த்தி வசூலிக்கப்பட வேண்டும். மேலும், புதிய குடிநீர் இணைப்புகளுக்கான குடிநீர் கட்டணம் ஏற்கனவே அமுலில் உள்ள இணைப்புகளுக்கும் பொருந்தும்.
3. உயர்வு செய்யப்பட்ட குடிநீர் கட்டணம் மற்றும் வைப்புத் தொகை விபரங்களை நாளிதழில் (தமிழ் மற்றும் ஆங்கிலம்) வெளியிட்டு பொதுமக்களின் ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகள் பெறப்பட வேண்டும்.
4. திருத்தம் செய்யப்பட்ட குடிநீர் விநியோக உபவிதிகளை மாவட்ட அரசிதழில் (தமிழ் மற்றும் ஆங்கிலம்) பிரசுரம் செய்து அதன் நகல்களை நகராட்சி நிர்வாக இயக்குநரக அலுவலகத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.
5. தேவையான மாமன்றத் தீர்மானம் மற்றும் துணை விதிகள் நகல்கள் போன்றவற்றுடன் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு முறைப்படி விண்ணப்பித்து இறுதி அங்கீகாரம் பெறப்பட வேண்டும்.
6. இவ்வலுவலக சுற்றறிக்கை ந.க.எண்.748/2008/குவ2 நாள் 21.09.2009-ல் ஏற்கனவே தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுரைகள் பின்பற்றப்பட வேண்டும்.
7. குடிநீர் விநியோக திட்டத்திற்கான உரிய அறிவுரைகள் பின்பற்றப்பட வேண்டுமெனவும், அனுமதியற்ற வீட்டுக் குழாய் இணைப்புகளை முறைப்படுத்துதல் தொடர்பான அரசாணையை பின்பற்றும்படியும் அறிவுறுத்தப்படுகின்றது.
8. பொது அங்கீகாரம் பெற்ற பின் அதை மாமன்றத்தில் தீர்மானமாக நிறைவேற்றி நாளிதழில் பிரசுரம் ஆகும் முன் அத்தீர்மான நகலை இவ்வலுவலகத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.

எனவே, நகராட்சி நிர்வாக இயக்குநரக தலைமைப் பொறியாளர் அவர்களின் பொது அங்கீகார கடிதத்தில் தெரிவிக்கப்பட்ட மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளின்படி, இம்மாநகராட்சியில் மேற்குறிப்பிட்ட அட்டவணையில் குறிப்பிட்டவாறு

குடிநீர் வைப்புத் தொகை மற்றும் குடிநீர் கட்டணம் ஆகியவற்றை நிர்ணயம் செய்திடவும், 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை அத்தொகையில் 5 சதவீதம் உயர்த்தி வைப்புத் தொகை மற்றும் குடிநீர் கட்டணத் தொகையினை உயர்த்தி நிர்ணயம் செய்திடவும் தெரிவிக்கப்பட்டுள்ளது என்ற விபரம் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் சமர்ப்பிக்கப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு:**

பொருளில் குறிப்பிட்டவாறு, நகராட்சி நிர்வாக இயக்குநரக தலைமைப் பொறியாளர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.28173/2022/இ-ஏ-2 நாள் 08.11.2022ல் நிபந்தனைகளின்படி பொது அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதின் படி, மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டவாறு குடிநீர் வைப்புத் தொகை மற்றும் குடிநீர் கட்டணம் ஆகியவற்றை நிர்ணயம் செய்திடவும, 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை அத்தொகையில் 5 சதவீதம் உயர்த்தி வைப்புத் தொகை மற்றும் குடிநீர் கட்டணத் தொகையினை உயர்த்தி நிர்ணயம் செய்திடவும் மாமன்றம் முடிவு செய்யலாம்.

(ந.க.எண்.இ1.769/2014)

**<u>தீர்மானம் எண்: 206 வார்டு எண் -55 மாமன்ற உறுப்பினர் திரு. முத்துசுப்பிரமணியன் மற்றும் வார்டு எண்-50 மாமன்ற உறுப்பினர் திரு.ரசூல் மைதீன் ஆகியோரது கோரிக்கையைத் தொடர்ந்து, பொது மக்களிடம் கருத்து கேட்பு பெற்று பின் தீர்மானம் நிறைவேற்றும் வகையில் அனைத்து மாமன்ற உறுப்பினர்களின் ஒருமித்த கருத்தோடு இத்தீர்மானத்தை ஒத்தி வைக்கத் தீர்மானிக்கப்பட்டது.</u>**

---

3. திருநெல்வேலி மாநகராட்சி, தச்சநல்லூர் மண்டலம், வார்டு எண் 30ல் திருநெல்வேலி மாநகராட்சி மைய அலுவலகம் எதிரில் உள்ள டவுண் பொருட்காட்சி திடலில் அரசுப் பொருள்காட்சி 2022 ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் திங்களில் 45 நாட்களுக்கு நடைபெறவுள்ளது. மேற்படி அரசுப் பொருட்காட்சியின் மூலம் அரசின் கொள்கைகள், மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் சாதனைகளை மக்கள் அறிந்து கொள்ள ஒரு வாய்ப்பு ஏற்படுத்தும் வகையில் பார்வையில் கண்டுள்ள தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (பொருட்காட்சி மற்றும் விழா)த் துறை அரசாணையில் வரிசை எண் : 8ல் திருநெல்வேலி மாநகராட்சி தம் நிதி ஆதாரங்களைப் பயன்படுத்தி மேற்படி பொருட்காட்சியில் பங்கேற்க அனுமதி அளித்துள்ளது. எனவே, நமது மாநகராட்சியின் கொள்கைகள், மேம்பாட்டுத் திட்டங்கள், நிர்வாகம் மற்றும் சாதனைகள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பொருட்காட்சியில் 40அடி x 20அடி என்ற அளவுக்குள் திருநெல்வேலி மாநகராட்சி அரங்கினை

அமைக்க வேண்டியுள்ளது. மேற்படி மாநகராட்சி அரங்கம் அமைப்பதற்கு தேவையான பொருட்களை வாடகை அடிப்படையில் பெறுவதற்கு மூன்று உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டு, அதில் குறைவான விலைப்புள்ளியினை கொண்டு அரசுப் பொருட்காட்சி 2022-ல் திருநெல்வேலி மாநகராட்சி அரங்கம் வாடகை அடிப்படையில் 45 நாட்களுக்கு அமைக்க ரூ.4.07/- லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேலும், மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி அரசுப் பொருட்காட்சி - 2022 நடைபெறவுள்ளதால் திருநெல்வேலி மாநகராட்சி அரங்கம் அமைக்கும் பணியினை திருநெல்வேலி மாநகராட்சி சட்டம் 1994 பிரிவு 15ன் கீழ் செய்வதற்கு கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 1. ஸ்ரீ அபிநயா இமேஜஸ்,<br>142D, சாலியர் தெரு,<br>நேதாஜி ரோடு,<br>திருநெல்வேலி டவுண் - 6 | மதிப்பீட்டு தொகையை விட 0.50% குறைவு |
| 2. ரோகினி டெக்கரேஷன்,<br>சந்தை முக்கு,<br>மேலப்பாளையம்<br>திருநெல்வேலி - 5 | மதிப்பீட்டு தொகையை விட 0.30% குறைவு |
| 3. மதி டெக்கரேஷன்,<br>16, தென்காசி ரோடு,<br>திருநெல்வேலி டவுண் - 6 | மதிப்பீட்டு தொகையை விட 0.40% குறைவு |

மேற்படி பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் **ஸ்ரீ அபிநயா இமேஜஸ்** என்ற நிறுவனம் பொருட்காட்சியில் மாநகராட்சி அரங்கம் வாடகை அடிப்படையில் அமைப்பதற்கு தயாரிக்கப்பட்ட **மதிப்பீட்டு தொகையிலிருந்து 0.5% குறைத்து** செய்ய விலைப்புள்ளி சமர்ப்பித்துள்ளது. மேற்படி அரசு பொருட்காட்சி நடைபெற உள்ளதால் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள **ஸ்ரீ அபிநயா இமேஜஸ்** என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று அந்நிறுவனத்திற்கு வேலை ஆணை வழங்கி பணியினை ஒப்படைப்பு செய்து பணியின் அவசர அவசியம் கருதி திருநெல்வேலி மாநகராட்சி சட்டம் 1994 பிரிவு 15ன் கீழ் அரங்கம் அமைக்கும் பணியினை உடனடியாக மேற்கொள்ளவும், அரசுப் பொருட்காட்சியில் திருநெல்வேலி மாநகராட்சி அரங்கம் வாடகை அடிப்படையில் (45 நாட்களுக்கு) மதிப்பீட்டு

தொகை ரூ.4.07/- லட்சத்திற்கு அமைக்கப்பட்டமைக்கு மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு**

திருநெல்வேலி மாநகராட்சி, தச்சநல்லூர் மண்டலம், வார்டு எண் 30ல் திருநெல்வேலி மாநகராட்சி மைய அலுவலகம் எதிரில் உள்ள டவுண் பொருட்காட்சி திடலில் அரசுப் பொருள்காட்சி 2022-ல் நமது மாநகராட்சியின் கொள்கைகள், மேம்பாட்டுத் திட்டங்கள், நிர்வாகம் மற்றும் சாதனைகள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பொருட்காட்சியில் 40அடி x 20அடி என்ற அளவுக்குள் திருநெல்வேலி மாநகராட்சி அரங்கினை வாடகை அடிப்படையில் 45 நாட்களுக்கு அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.4.07/- லட்சத்திற்கும், பணியின் அவசர அவசியம் கருதி குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள **ஸ்ரீ அபிநயா இமேஜஸ்** என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று அந்நிறுவனத்திற்கு வேலை ஆணை வழங்கி பணியினை ஒப்படைப்பு செய்து திருநெல்வேலி மாநகராட்சி சட்டம் 1994 பிரிவு 15ன் கீழ் அரங்கம் அமைக்கப்பட்டமைக்கு மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**ம.எண் : 165/2022-23 (தச்சை)**

**தீர்மானம் எண்: 207 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

---